**O.S. No. : 20/2025**

Dated: 13.07.2026

**பி.வா.சா.1: போஜன்; த/பெ. குட்ட பெள்ளு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

27. நான் முந்தைய சாட்சியத்தில் வழிப்பாதையில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளதாக கூறியுள்ளதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழிப்பாதையில் சமுதாயக்கூடம் கட்டப்படவில்லை, சமுதாயக்கூடம் கட்டுவதற்காக விடப்பட்டிருந்த 6 சென்ட் பூமியை நாங்கள் வழியாக பயன்படுத்தி வந்தோம், சமுதாயக்கூடம் கட்டப்பட்ட பின்பு அதன் வழியாக செல்ல இயலவில்லை. நான் கூறுவதுபோல பொதுவழியின் மீது சமுதாயக்கூடம் கட்டப்படவில்லை என்றால் அங்கு வழியே கிடையாது.

28. சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பூமியிலிருந்து வாதி பூமிக்கு செல்லும் பாதையில் தடுப்பு சுவர் கட்டியுள்ளேன் என்றும், அவ்வாறு தடுப்பு சுவர் கட்டுவதற்கு நான் கட்டிட அனுமதி பெற்றுள்ளேனா என்றால் நான் அவ்வாறு தடுப்பு சுவர் எதுவும் கட்டவில்லை. நான் அனுப்பியுள்ள பதில் அறிவிப்பான வா.சா.ஆ.9 ஆவணத்தில் நான் முன்பு சாட்சியம் அளித்த விவரங்களான எனக்கு 2 சென்ட் பூமி உள்ளது, எனது மாமனாருக்கு 3 சென்ட் பூமி உள்ளது மற்றும் எனக்கு மற்றொரு 4 சென்ட் பூமி உள்ளது ஆகிய விவரங்களை கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

29. சமுதாயக்கூடத்திற்கும், எனது வீடு அமைந்துள்ள பூமிக்கும் இடையே எனக்கோ, எனது மாமனாருக்கோ நான் கூறியவாறு பூமி எதுவும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. அவ்வாறு பூமி இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, என்னால் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியும்.

30. வாதி எனது உறவினரா என்றால் இல்லை. வழக்கு சொத்தான 25 சென்ட் பூமியில் வாதிதான் விவசாயம் செய்து வருகிறார் என்றும், அதனால் அவரை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்றால் **(சாட்சி அவர் விவசாயம் செய்தால் செய்து கொள்ளட்டும் என்று சாட்சியம் அளிக்கிறார்), (சாட்சியிடம் கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதில் அளிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது).**

31. நான் வாதி பூமிக்கு செல்லும் வழியில் இடையூறு செய்யும் விதமாக தடுப்பு சுவர் கட்டியுள்ளேன் என்றும், அதை இடித்து அகற்ற நான் கடமைப்பட்டவன் என்றும் சொன்னால் சரியல்ல, நான் வாதி அந்த பூமியை வாங்குவதற்கு முன்பே அங்கு வீடு கட்டியுள்ளேன். நான் கேரி பூமியில் வீடு கட்டியுள்ளேன் என்றும், அவ்வாறு கேரி பூமியில் வீடு கட்ட எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, அந்த கேரி அமைந்துள்ள இடம் எனது பட்டா பூமியாகும், அதனால் அங்கு வீடு கட்டியுள்ளேன்.

32. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 கட்டிட வரைபடத்தில் கட்டிடம் கட்டப்பட போகும் இடத்திற்கு முன்பு காலி இடம் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பி.வா.சா.ஆ.5 கட்டிட வரைபடத்தில் காலி இடமாக காண்பிக்கப்பட்ட இடத்தில்தான் நான் 2 வருடங்களுக்கு முன்பு வாதியின் பூமிக்கு செல்லும் வழியை அடைத்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.07.13 19:18:50 +0530